செ.வெ.எண்: 831 நாள்: 27.12.2024

## புதுக்கோட்டை மாவட்டம்

**விவசாயிகளுக்கு மானிய விலையில் பம்பு செட்டுகளை செல்போன் மூலம் கட்டுப்படுத்தும் கருவி வழங்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் செல்போன் மூலமாக விவசாய பம்பு செட்டுகளை இயக்கும் கருவி மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

விவசாயிகள் இரவு நேரங்கள் மற்றும் மழைக்காலங்களில் வயல்வெளிகளில் உள்ள பம்பு செட்டுகளை இயக்க செல்கிறார்கள். அவ்வாறு செல்லும் போது பாம்புக்கடி, விஷப்புச்சிக்கடி உள்ளிட்ட பிரச்சனைகளை சந்திக்க நேரிடுகிறது. இதை தவிர்க்கும் வகையில் தங்களது பம்பு செட்டுகளை வீடுகளில் இருந்தபடியே இயக்கும் கருவி மானியத்தில் வழங்கப்படுகிறது. இதன் மூலம் விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்பு செட்டுகளை தொலைவில் இருந்து செல்போன் மூலம் இயக்கவும், நிறுத்தவும் உதவுகிறது.

இதற்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த செலவில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.7 ஆயிரமும், மற்ற விவசாயிகளுக்கு மொத்த செலவில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.5 ஆயிரம் வழங்கப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் 86 பம்புசெட்டுகளுக்கு இந்த கருவி அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை தலைமை பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மாடல்களை அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ் பயனடைய விரும்பும் விவசாயிகள் புகைப்படம், நிலப் பட்டா, அடங்கல், ஆதார் நகல், சிறு குறு விவசாயி சான்று மற்றும் சாதிச் சான்று ஆகிய உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துப் பதிவு செய்து பயனடையலாம்.

இத்திட்டங்களில் பயன்பெற அருகில் உள்ள வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களை அணுகலாம். வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களான உதவி செயற்பொறியாளர்(வே.பொ), திருச்சி மெயின் ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, (கைபேசி எண்: 94421 78763) என்ற அலுவலகத்தையும், உதவி செயற்பொறியாளர்(வே.பொ), நைனா முகமது கல்லூரி அருகில், இராஜேந்திரபுரம், அறந்தாங்கி, (கைபேசி எண்: 63834 26912) என்ற அலுவலகத்தையும், செயற்பொறியாளர்(வே.பொ), திருச்சி மெயின்ரோடு, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, தொலைபேசி எண்: 04322 221816 என்ற அலுவலகத்தையும், விவசாயிகள் அணுகி பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai